அசல் வழக்கு எண். 164/2015 தேதி-15.07.2025

பி.வா.சா.1 - மணிமன்னன்

**4 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

வாதி அரசு அதிகாரிகளை தரப்பினர்களாக சேர்த்து வழக்கு தாக்கல் செய்துள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியும். மேற்படி நபர்கள் வாதியின் இடத்தை கையகப்படுத்தி பட்டியல் இனத்தவர்களுக்காக கொடுத்த பின்னிட்டு மீது உள்ள வாதியின் இடத்தில் இடம் குறைவாக உள்ளதாக கூறி பரிகாரம் கோரியுள்ளார்கள். வருவாய் துறை அதிகாரிகள் வாதிக்கோ, எங்களுக்கோ சாதகமாக நடந்து கொண்டார்களா என்றால் இல்லை. வருவாய் துறை அதிகாரிகள் உரிய ஆவணங்களின் அடிப்படையில் விசாரணை செய்து தான் பட்டா வழங்கியுள்ளார்கள் என்றால் சரிதான். எனவே அரசு அதிகாரிகள் இவ்வழக்கில் தேவையற்ற தரப்பினர்கள் என்றும், அவர்களை பொறுத்து இவ்வழக்கை தள்ளுபடி செய்துவிடலாம் என்றால் சரிதான்.

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

Sd/-A.யுகாதிமரியா

**Additional District Munsif,**
**Kulithalai.**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 34/2019

பிரதிவாதி தரப்பு சாட்சி -3 - செல்வம் திரு.M.பெரியசாமி, இளநிலை உதவியாளர் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு ம் 15.07.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | செல்வம் | கிராமம் | |
| த/பெ | ரெத்தினம் பிள்ளை | தொழில் | |
| தாலுக்கா | | மதம் | |
| ஜாதி | | வயது | 50 |

**பி.வா.சா. 3 - செல்வம் - முதல் விசாரணை**

நான் இவ்வழக்கின் பிரதிவாதி தரப்பு 3ம் சாட்சி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் என்னால் சொல்லப்பட்டு, தயார் செய்யப்பட்டது. அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

**வாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

**Additional District Munsif,**
**Kulithalai.**

அசல் வழக்கு எண். 36/204 தேதி-15.07.2025

வா.சா.1 - ஜெயக்குமார்

1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1. நான் தாவா சொத்து உள்ள ஊரில் தான் நிரந்தரமாக குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.8 ல் உள்ள வம்சாவழி பட்டியலில் உள்ள உறவுமுறைகள் அனைத்தும் எனக்கு தெரியும் என்றால் சரிதான். தாவா புல எண்ணில் மொத்தம் உள்ள 15 சென்ட் நிலமும் நான்கு சகோதர்களுக்கும் பாத்தியம் என்றால் சரிதான். மேற்படி நான்கு சகோதரரில் ஒருவரான குமரேசன் என்பவரும் 1ம் பிரதிவாதி குமரேசன் என்பவரும் வெவ்வேறு நபர்கள் என்றால் சரிதான். மேற்படி நான்கு சகோதரர்களில் சசிக்குமார் மற்றும் ஜவகர் ஆகியோர் சேர்ந்து ரமேஷ் என்கிற மற்றொரு சகோதருக்கு வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தின் மூலம் கிரையம் செய்துள்ளார்கள் என்றால் சரிதான்.

2. வா.சா.ஆ.1 ஆவணத்திற்கு பின்னிட்டு ரமேஷ்க்கு அவரது பங்கையும் சேர்த்து மொத்தம் ¾ பங்கு நிலம் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். ரமேஷ் மேற்படி ¾ பங்கு நிலத்தை 1ம் பிரதிவாதி குமரேசனுக்கு வா.சா.ஆ.2 ஆவணத்தின் மூலம் கிரையம் செய்துள்ளார் என்றால் சரிதான். நான் மேற்படி நான்கு சகோதரர்களில் ஒருவரான குமரேசன் என்பவரிடமிருந்து அவருக்கு பாத்தியப்பட்ட ¼ பங்கு நிலத்தை வா.சா.ஆ.9 ஆவணத்தின் மூலம் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.9 கிரையமானது வா.சா.ஆ.2 கிரைய ஆவணத்திற்கு பின்னிட்டு ஏற்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ன் படி குமரேசன் கிரையம் வாங்கிய உடன்காலில் வருவாய் துறையினரிடம் உட்பிரிவு செய்து பட்டா பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டார் என்றால் அது பற்றி தெரியாது. மேற்படி உட்பிரிவு செய்யக்கோரி 1ம் பிரதிவாதி குமரேசன் நடவடிக்கை எடுத்த விவரம் எனக்கு கிரையம் கொடுத்த குமரேசனுக்கு தெரியும் என்றால் சரியல்ல.

3. மேற்படி விவரத்தை தெரிந்து கொண்டு தான் எனக்கு கிரையம் செய்து கொடுத்த குமரேசன் நான்கில் ஒரு பங்கை எனக்கு கிரையம் செய்தார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி குமரேசன் கிரையம் வாங்கிய சொத்தை அவருடைய சகோதரி மகளான ரவீனாவிற்கு வா.சா.ஆ.3 ஆவணத்தின் படி கிரையம் செய்து

கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி ரவீனா மேற்கூறிய நான்கு சகோதரர்களில் ஒருவரான ரமேஷின் மனைவி ராதிகாவிற்கு அவர் கிரையம் பெற்ற சொத்தை வா.சா.ஆ.10 ஆவணத்தின் மூலம் கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி ரமேஷ் தற்போது உடல்நிலை பாதிக்கப்பட்டு வீட்டில் உள்ளரா என்றால் ஆமாம். 1ம் பிரதிவாதி குமரேசன் கிரையம் வாங்கி 2ம் பிரதிவாதி ரவீனாவிற்கு விற்று பின்னிட்டு ரவீனா ராதிகாவிற்கு விற்ற சொத்தை பொறுத்து எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரிதான்.

4. மொத்த சொத்து 15 சென்ட் நிலத்தை ஒட்டி எனக்கு பாத்தியப்பட்ட சொத்து உள்ளதா என்றால் தெற்கே உள்ளது. மேற்படி எனக்கு பாத்தியப்பட்ட நிலம் சர்வே எண்.448/3B3A க்கு கட்டுப்பட்டது என்றால் சரிதான். மேற்படி நிலத்திற்கான பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் எனது பெயரிலும் எனது அண்ணன் கலைச்செல்வன் பெயரிலும் உள்ளது. 1ம் பிரதிவாதி குமரேசன் கிரையம் வாங்கிய பிறகு மொத்த சொத்தான 15 சென்ட் அளவீடு செய்யப்பட்டு மேல்புறம் உள்ள ¼ பங்கு சர்வே எண்.448/3B2B1 என்றும் , கீழ்புறம் ¾ பங்கு சர்வே எண்.448/3B2B2 என்றும் உட்பிரிவு செய்யப்பட்டு, கீழ்புறம் உள்ள பகுதிக்கு 1ம் பிரதிவாதி குமரேசன் பெயரில் தனிப்பட்டா எண்.2690 வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5. மேற்படி உட்பிரிவை அனுசரித்து தான் 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்யும் போது குறிப்பிட்டு நான்கு எல்லையில் கிரையம் செய்துள்ளார் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி கிரையம் வாங்கிய சொத்தில் இரும்பு தூண் நட்டு மேற்கூரை ஆகியவை 1,2 பிரதிவாதிகளால் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி கிரையம் பெற்ற வா.சா.ஆ.3 ஆவணத்தின் அடிப்படையில் அவர் கிரையம் பெற்ற சொத்திற்கு தனிப்பட்டா எண்.2734 வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1,2 பிரதிவாதிகள் தனிப்பட்ட அனுபவத்தில் இருப்பதை தெரிந்து கொண்டு நாங்கள் பிரச்சனை செய்ததால் தான் 04.12.2023 மற்றும் 08.03.2024 ஆகிய தேதிகளில் காவல் துறையில் புகார் அளிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். உண்மையான உட்பிரிவுகள் மற்றும் வருவாய் துறை ஆவணங்களையும், உண்மையான அனுபவத்தை மறைத்து இவ்வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வருவாய் துறை ஆவணங்கள் சம்மந்தமாக 3 முதல் 6 பிரதிவாதிகள் எடுக்கும் நடவடிக்கைகள் பொறுத்து நான் இந்நீதிமன்றம் பரிகாரம் கோர முடியாது

என்றால் சரியல்ல.

6. உட்பிரிவு இரத்து சம்மந்தமாக யார் மனு செய்தது என்றால் நான் தான் செய்தேன். வா.சா.ஆ. 6 ஆவணம் நான் கொடுத்த மனுவின் அடிப்படையில் வருவாய் துறையினரால் எனக்கு அனுப்பப்பட்ட அறிவிப்பு என்றால் சரிதான். மேற்படி மனுவில் குறிப்பிட்டு தற்போது என்ன நிலையில் உள்ளது என்றால் நிலுவையில் தான் உள்ளது. பிரிவினை இல்லாத நான்கில் ஒரு பங்கு நிலத்தை நான் வா.சா.ஆ.9 மூலம் கிரையம் பெற்றதின் அடிப்படையில் பாகப்பிரிவினை கோரி தான் வழக்கு தாக்கல் செய்ய முடியும் என்றும், நிரந்தர உறுத்தக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்ட இவ்வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி கிரையம் பெற்று 2ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்து பின்னிட்டு ரமேஷ் மனைவி ராதிகாவிற்கு 2ம் பிரதிவாதியால் கிரையம் செய்யப்பட்ட நிலமானது ஆரம்பத்தில் உரிமையாளராக இருந்த ரமேஷின் குடும்பத்திடமே கிரையம் செய்யப்பட்டுவிட்டது என்றால் சரிதான்.

7. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் பிரச்சனை ஏற்பட்டது என்று கூறியுள்ள நிலையில் மேற்படி பிரச்சனை நடைபெற்ற தேதி தெரியுமா என்றால் சரியாக நியாபகம் இல்லை. நான் வருவாய் துறை அதிகாரிகளுக்கு எதிராக கோரியுள்ள 2ம் பரிகாரம் பட்டா பாஸ்புக் சட்டத்தின் படி இந்நீதிமன்றத்தில் நிலைநிற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதியிடம் கிரையம் பெற்ற ரமேஷ் மனைவி ராதிவாவை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். நான் கோரியுள்ளபடி எந்த பரிகாரமும் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

**2ம் பிரதிவாதி தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்ளப்பட்டதாக கூறப்பட்டதின் அடிப்படையில் 2ம் பிரதிவாதியின் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்பட்டது.**

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

**Additional District Munsif,**
**Kulithalai.**